விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | தை 10 | றஜப் 6 | இதழ்: 272

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 23-1-1991

## 5,200 குடும்பங்கள் வடமராட்சியில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியிலிருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 5200 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக இருக்கிறார்கள்.

இவர்களுக்கு இரு நாட்களுக்கு சமைத்த உணவு வழங்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இக்குடும்பங்களுக்கு 4-ம் கட்ட விசேஷ உணவு விநியோகத்தை உடனடியாக மேற்கொள்ளுமாறு வடமராட்சியிலுள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு யாழ். அரச அதிபர் பணித்துள்ளார்.

வடமராட்சிப் பகுதி மக்களில் பலர் தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசிப் பொருள்களை தென்மராட்சி அகதிகள் நிவாரணக்கழகம் வழங்கியுள்ளது. (153)

## குவைத் எண்ணெக்குதங்களை ஈராக் அழித்தது

[றியாட்)

குவைத்திலுள்ள எண்ணெக் குதங்களையும், எண்ணெக் கிணறுகளையும், ஈராக்கிய படைகள் வெடிவைத்து அழித்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப்பகுதிகளில் பரவலான விமானத் தாக்குதல்

# கோடி ரூபா சொத்துக்கள் சேதம்

(நமது நிருபர்கள்)

தமிழ்ப் பிரதேசங்களின் பல பகுதிகளில் நேற்று மூன்ருவது நாளாக ஹெலிகொப்டர் மற்றும் அவ்ரோ, பொம்மர், பயணிகள் விமானங்களிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதியை நோக்கி கடும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலினுல் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 13 விமானங்கள் குண்டுவீச்சு

ஏழு குண்டு வீச்சு விமானங்கள், மூன்று பயணிகள் விமானங்கள் மூன்று ஹெலிகொப்டர்கள் ஆகியவை இணைந்து நேற்றுக்காலை 7-00 மணிதொடக்கம் வவுனியா சேமமடு காட்டுப் பிரதேசத்தில் பரவலாக குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தின.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் பல வீடுகள் எரிகின்றன

வடமராட்சிப் பகுதியில் நேற்று 3-வது நாளாக ஸ்ரீலங்கா விமானங்கள் பயங்கர குண்டுத் தாக்குதலை நடத்தின.

ஒரு பயணிகள் விமானம் 6 குண்டுகளையும், அவ்ரோ விமானம் 19 எரி குண்டுகளையும் வீசின.

இத்தாக்குதலினுல் நூற்றுக்கணக்கான பொதுமக்களின் வீடுகள், கட்டிடங்கள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன. அவ்ரோ விமானம் வீசிய எரிகுண்டுகளினுல் இப்பகுதியில் பல வீடுகள் எரிந்துகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கொற்ருவத்தையில் வை-12 ரக விமானம் நடத்திய தாக்குதலினுல் க. மாலதி (வயது 18), வி. செல்வராசா [வயது 28], திருமதி முருகன் ஆதி (வயது 78), கே. மேரி ஆகியோர் காயமடைந்தனர். (51]

## திருமலையில் கண்ணிவெடி படையினர் பலர் பலி

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 9 மணியளவில் திருமலை நகரிலிருந்து இராணுவத்தினர் ட்ரக்வண்டியில் தம்பலகாமம் பகுதிக்கு ரோந்து சென்றபோது புலி

(4ம் பக்கம் பார்க்க)

## உ. அ. அதிபர் அலுவலகம் மீது தாக்குதல்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் மீது நேற்று 3-வது தடவை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதினுல் மேற்படி அலுவலகம் பலத்த சேதமடைந்தது.

வெளிநோயாளர் மருந்து கொடுக்கும் மருந்தகம் மற்றும் ஆண்கள் விடுதியும் சேதமடைந்ததுடன் வைத்திய சாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த சிற்றூழியர் கு. ஆனந்தலிங்கம் காயமடைந்துள்ளார்.

வேலணை சரஸ்வதி வித்தியா சாலைக்கு அருகில் விழுந்த குண்டு வெடித்தபோதும் மாணவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினுர்கள்.

## மன்னுரில் குண்டுவீச்சு

மன்னுர் மாவட்டத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இம்மாவட்டத்தில் உள்ள பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் 4 குண்டுவீச்சு விமானங்கள், ஒரு சீ-பிளேன், ஒரு பயணிகள் விமானம், மூன்று ஹெலிகொப்டர்கள் என்பன தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதலினுல் பல பொதுமக்களின் வீடுகளும், பொதுக் கட்டடங்களும் சேதமடைந்தன.

## எரிபொருள் பதுக்கலினுல் மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

எரிபொருள்கள் பதுக்கலினுல் பாடசாலை மாணவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்போது தவணைப் பரீட்சைகள் நடைபெற்றுவருகின்றன.

இப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்காக இரவு நேரங்களில் மாணவர்கள் படிப்பதற்கு மண்ணெண்ணெ அல்லது தேங்காயெண்ணெ வசதியின்றிச் சிரமப்படுகின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டினுல் பெரும்பாலான வீடுகள்

(4ம் பக்கம் பார்க்க)

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 பரல் மண்ணெண்ணெ மீட்பு

(யாழ்ப்பாணம்)

தாவடி, இருபாலைப் பகுதிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான மண்ணெண்ணெ பரல்கள் விடுதலைப் புலிகளினுல் மீட்கப்பட்டன.

தாவடியில் பதுங்கு குழிக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 75 பரல் மண்ணெண்ணெ விடுதலைப் புலிகள் நடத்திய தேடுதல்வேட்டையின்போது கைப்பற்றப்பட்டது.

இதேபோல இருபாலைப் பகுதியில், நிலத்துக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 25 பரல் மண்ணெண்ணெ விடுதலைப் புலிகளினுல் தோண்டி எடுக்கப்பட்டது.

மண்ணெண்ணெ பரல்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தரன் ஸ்ருடியோ

கறுப்பு வெள்ளை படங்கள் என்லாட்ஜ்மென் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் போட், விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகள் 24, யாழ். வீதி, (ரெட்ணு வீதி), யாழ்ப்பாணம். (சி 4274)

### கொம்பியூட்டர் கல்வி

கொம்பியூட்டர் புரோகிறமிங் இன் Basic Language. ஆரம்பம்: 27-01-91 - 10-30 மணி. I.A B, Short - Hand & Typing நடைபெறுகின்றன. School of Business Administration 16, 3ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சி-4279)

### விற்பனைக்கு

திருநெல்வேலி-வடக்கு முத்துத்தம்பி பாடசாலைக்கு அண்மையில் 4½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. இ. அரிச்சந்திரன், அரசடி லேன், தாவடி வடக்கு, கொக்குவில். (சி-4282)

### தேவை

சுளுவித்துப்பரவாக்கப்பட்ட முழு வெற்றுப் போத்தல், அரைப்போத்தல் திரவம் கொள்ளக்கூடிய போத்தல்கள் மூடியுடன்தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம் (எ-1053)

### பரீட்சை (ஆண்டு 5)

பிரபலபாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை 27-01-91 ஞாயிறு மு. ப.8-00, மு ப. 10-30க்கு 219, நாவலர் வீதி (யுப்பிற்றர் வீடியோ சென்ரர் முன்பாக, யாழ்ப்பாணம் பி. ப. 1-30 மணிக்கு மக்கள் வைத்தியசாலை முன்பாக, கொக்குவில் மேற்கு [குளப்பிட்டி - ஆனைக் கோட்டைவீதி) நடைபெறும். அனுமதிப் பரீட்சை மாதிரி வகுப்புகளும், புதிய ஆண்டு 3, 4, 5 வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. (சி-4283)


## SUBRA INSTITUTE SITHANKERNY

**ஆண்டு 11, 10, 9 புதிய வகுப்புகள்**

**ஆரம்பம்: 27-01-1991 ஞாயிறு**

**O/L DAY CLASS**

**இன்று ஆரம்பம்: (23-01-1991) காலை 9-00 மணி**

ஆசிரியர் குழு :

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. தனயரட்ணம் |
| தமிழ் | — | திரு. சின்னத்தம்பி |
| சமூகக்கல்வி | — | திரு. சண் |
| ஆங்கிலம் | — | திரு. தவபால் |
| வர்த்தகம் | — | திரு. விஜேந்திரன் |

அனுபவமிக்க திறமையான ஆசிரியர் குழுவினால் போதனை நிகழ்த்தப்படும். [சி-4280]


## மாவீரர் நாள் கலை, கலாச்சார போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தினத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய கலை, கலாசாரப் போட்டி முடிவுகள் வருமாறு:

### கட்டுரை:

கீழ்ப்பிரிவு: 1. திருநாவுக்கரசு குமுதினி வதிரி கரவெட்டி, தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி 2. பாக்கியஜீவர், பாக்கியசுகந்தி, கிளிநொச்சி கனகபுரம் அ. த. க. பாடசாலை, 'விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும், வி. அஜந்தா, வித்தியானந்தாகல்லூரி, முள்ளியவளை, 'தமிழீழமாணவர்களது கல்வியின் எதிர்காலம்' 3. வ. பார்த்திபன், இல. 200, பிரதானவீதி,சுண்டிக்குளி யாழ்ப்பாணம். 'போராடுவதற்காகக் கற்போம்' கோ. சசிகலா, பம்பைமடு அ, த. க. பாடசாலை, வவுனியா 'விடுதலைப்போராட்டமும் மாணவர்பங்களிப்பும்' ஸ்ரீவல்லிபுரம் அம்பிகா. பருத்தியோலை கந்தரோடை, சுன்னாகம், 'தமிழீழ விடுதலைப்போராட்டத்தில மாணவர்களின் செயற்பாடுகள்.

மத்தியபிரிவு: 1. க. சிவாநுஜா, யா/இந்துமகளிர் கல்லூரியாழ்ப்பாணம், 'தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி' 2. சுதேசினி உலகநாதன், கரம்பகம், மிருசுவில், 'இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின்சமூகப்பணி' 3 சி புகலவன், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்' சிவஞானம் பூமகள் வட்டு/மேற்கு, வட்டுக்கோட்டை, 'விடுதலைப்போராட்டமும் மாணவர் பங்களிப்பும்'

மேற்பிரிவு: 1. க. மதுமதி, நெடியகாடு, வல்வெட்டித்துறை 'தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி'. 2. பத்மினி செல்வராஜா, பாடசாலை வீதி, வதிரி, கரவெட்டி 'விடுதலைப் போராட்டமும மாணவர் பங்களிப்பும்'. 3 யசோதா சோதிலிங்கம், ஐயனார் கோவில் வீதி, சண்டிலிப்பாய் 'விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்' பொன்னுக்கோன் யூட் பிரகாஸ், 70/9, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்' விடுதலைப் போராட்டத்தில் மாணவர் பங்களிப்பு'.

தனியார் பிரிவு: 1. அனுமித்ரன் சங்கரா பரணம், தென்மயிலை (மயிலிட்டி தெற்கு). தெல்லிப்பளை ,தமிழீழப் போராட்டத்தில் பாரதத்தின் தலையீடுகள்' 2. முருகனடியான், '174, ஜோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 'எங்கள் வாழ்வும் எங்கள் வைராக்கியமும்'. சகிலா தர்மலிங்கம், ஜீ பி. எஸ் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் 'இவர்கள் திருத்தப்பட வேண்டியவர்கள் அல்லர், திருந்த வேண்டியவர்கள்'. வசந்தி நமசிவாயம், 7ம் ஒழுங்கை, கோவிற்புதுக்குளம், வவுனியா 'வீரகாவியம் படைத்த லெப். சீலன்'. மிதிலைச்செல்வி கணபதிப்பிள்ளை, உரும்பராய் வடக்கு, உரும்பராய் 'வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மறவர் படையும் மறக்குடி மகளிர் பங்களிப்பும்'.

### சிறுகதை

கீழ்ப்பிரவு: 1 கனகலிங்கம் தர்மச்சகரம், முகமாலை, எழுதுமட்டுவாள், 'தகுதி' 2. ஜெயசாந்தி சிவப்பிரகாசம், கச்சாய்வீதி, சாவகச்சேரி. காலத்தித்கேற்ற கோலங்கள்' 3. து. குன்றக்குமரன், வரணி மகா வித்தியாலயம், வரணி. 'விடுதலைப்பாதையில் ஒரு நாள்'. செல்வி தேவகி அனந்தராஜ், தெனியம்பைத்தெரு. வல்வெட்டித்துறை, வேங்கைகளும் விட்டில் பூச்சிகளும்'

மத்திய பிரிவு:1. மு. பகீரதி, கிளி. தர்மபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி. 'அவனும் ஒரு போராளியே' 2. சுப்பிரமணியம் குகதாஸ், கிளுவானை ஒழுங்கை, கோப்பாய். 'ஒரு மாணவனின் மறுதலிப்பு' 3. மரியதாஸ் அனிற்ரு, மரிசலின் மரியதாஸ், இல. 761, கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம், 'கண்ணீர்'. இ. அனுரதன், 60, அத்தியடி புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். பாதை மாறும் போது......'

மேற்பிரிவு: 1. கி. ரகுராம், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை, 'ஞான உபதேசம்' 2. செல்வி திருமகள் அரியநாயகம், 'துரை பொன்வாசம்' சன்னதி வீதி, உடுப்பிட்டி 'மன்னிற்காக......' 3. ச. மதிருபன், வாசிகசாலையடி, உடுப்பிட்டி. "அவன் மாணவனல்ல......' 4. குகப்பிரியா யோராயிரம், 33, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 'திண்ணிய நெஞ்சம் வேண்டும்'

தனியார் பிரிவு: 1 சி கருணாகரன் பிரதான வீதி இயக்கச்சி. 'அவர்கள் போன பாதை' 2. கலைவாணி இராஜகுமாரன், மாதகல் கிழக்கு, மாதகல் 'இலட்சங்களும் இலட்சியங்களும்' 3. என். கிருஷ்ணசிங்கம், 23/4, புகையிரத நிலைய முன்

(3-ம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் சடலம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் சந்தியில் கடந்த ஞாயிறு வயோதிபர் ஒருவரின் சடலம் அனாதரவான நிலையில் கிடக்க காணப்பட்டது.

நீண்டநேரமாக கவனிப்பார் அற்ற நிலையில் கிடந்த இச்சடலம் மாலை விடுதலைப் புலிகளால் அப்புறப் படுத்தப்பட்டது. (வி)

## தோட்டங்களில் களவு

(உடுவில்)

மானிப்பாய் பகுதிகளில் உள்ள தோட்டங்களில் இருந்து மிளகாய், கத்தரி போன்ற கன்றுகள் தினமும் களவாடப்பட்டு வருவதாக தோட்டக்காரர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் கேலங்காமம் குளத்தை அண்டிய தோட்ட வெளிகளில் இவ்வாறு பயிர்கள் களவாடப்படுகின்றனவாம். எரிபொருள், பசளை போன்ற பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டின் மத்தியிலும் மரக்கறிச்செய்கையில் ஈடுபட்டுள்ள கமக்காரர்களுக்கு பயிர்கள் களவாடப்படுவது வேதனையையும் வெறுப்பையும் ஊட்டி வருகிறது.

நடப்பட்ட கன்றுகளுக்கு நீரூற்றியபின் தோட்டக்காரர் வீடு சென்ற கையோடு பயிர்கள் களவாடப்படுகின்றனவாம். (109)

## இராசிபலன்

23-01-91

புதன்கிழமை

மேடம்: தொழிலில் பாராட்டு, புதிய முயற்சி, இனசன மகிழ்ச்சி

இடபம்: வாக்குக் கலகம், குடும்பக் கவலை, அலைச்சல் மிகுதி.

மிதுனம்: விருந்துபசாரம். தெய்வீகச் செலவு, காரிய பலிதம்.

கடகம்: மன உழைச்சல், மாதா கவலை, வீண்பழி கேட்டல்.

சிங்கம்: ஏமாற்றம், நோய் பாதிப்பு. குடும்பக் கஷ்டம்.

கன்னி; காரிய வெற்றி, தொழில் லாபம், வாக்கு வன்மை.

துலாம்: அதிகாரம், பெரியோர் ஆசி, மனச்சுமை.

விருச்சிகம்: வயிற்றில் ரோகம், குடும்பப் பகை, சகோதர உதவி.

தனுசு: புத்திரர் கவலை, புதுப் பொருள் சேர்க்கை, கடன் சுமை.

மகரம்: உடல் சோர்வு, மனைவியால் துன்பம், கடமை தவறுதல்.

கும்பம்: கல்வியால் புகழ், குடும்ப சுகம், தொழில் லாபம்.

மீனம்: மனவேதனை, குடும்பக் கஷ்டம், தொழில் பாதிப்பு.

'ஜோஸ்யர்'

## மர்மமான முறையில்— கொழும்புத்துறை இளைஞர் கொழும்பில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த தி. சுதர்சன் (வயது 20) என்னும் இளைஞர் கொழும்பு தெஹிவளை கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த பல மாதமாக கொழும்பில் உறவினர் வீட்டில் வசித்து வந்த மேற்படி இளைஞர் இம் மாதம் 12ம்தேதி மாலை மூன்று மணியளவில் வெளியில் சென்றவர் நீண்ட

[4ம் பக்கம் பார்க்க]


## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

MILK WHITE LIQUID SOAP

(All-Purpose Dirt Remover)

சாதாரண வீட்டுச் சலவைக்கு பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக் கரண்டி மில்க் வைற் திரவச் சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவைத் துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்குக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ்செய்யவும்.

- மில்க்வைற்.

(ஏ 1051)

## பிரேமாவின் முதலைக்கண்ணீர்!

"வளைகுடா யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது! உடனடியாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்" என்று 'இலங்காபுரி' ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா ஏக்சப் பெருமூச்சுவிட்டு உருக்கமான வேண்டுகோளை உலகுக்கு விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கு யுத்தத்தில், அப்பாவி மக்களின் உயிரிழப்பு குறித்து தாம் ஆழ்ந்த கவலையடைவதாகவும், இத்தகராற்றை காலதாமதம் இன்றி பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு அணிசேரா நாடுகளுக்கு பரிபூரண ஆதரவு வழங்குவதாகவும் யூகோஸ்லாவிய ஜனாதிபதிக்கு திரு: பிரேமதாசா அவசரக் கடிதம் அனுப்பியுள்ளார்!

"ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி" என்ற போலி வேடதாரிகளின் நாடகப் பாணியில் சமாதானப் புறுவாக உருமாறி விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் நகைப்புக்கு இடமாகியுள்ளது.

வலுச்சண்டைக்கு இழுத்தும், வளைந்து கொடுக்கமறுக்கும், எதிரிமீது எதுவும் செய்யமுடியாத அவலத்தில்—கண்டவன் நின்றவனை கண்மூடித்தனமாகத் தாக்கி தனது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் ஆவேசக்காரனைப் போல விமானப் படையினர் நடந்துகொண்டுள்ளனர்!

ஊர் உலகம் முழுவதும் வளைகுடா யுத்தத்தில் மூழ்கிக்கிடக்க இரவோடு இரவாக கண்துடைப்பு ஊரடங்குச்சட்டம் பிறப்பித்து, மக்கள் உறக்கத்திலிருந்து விழித்து எழுமுன்னரே குண்டுமாரி பொழிந்து படுக்கையிலேயே சவக்கிடங்கு தோண்டி அதர்மயுத்தம் நடாத்திக்கொண்டிருக்கும் ஜனாதிபதி பிரேமதாசா, வளைகுடாயுத்தம் குறித்து முதலைக் கண்ணீர் வடித்து வருகிறார்!

வளைகுடாவில் ஐந்துநாட்கள் யுத்தத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான விமானங்கள் தொன் கணக்கில் குண்டுமாரி பொழிந்தும் மிகக்குறைந்த பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள வேளையில், வடக்கிலே இரண்டு நாள் குண்டுவீச்சில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டும், இருபதுக்குமேற்பட்டோர் காயமடைந்தும் நூற்றுக்கணக்கான வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன!

கடந்த ஆறுமாதகாலத்துக்கு மேலாக, கெடுபிடி யுத்தம் நடாத்தி உருப்படியாக எதனையும் சாதிக்கத் தவறிய முப்படையினர் இம்மாத இறுதியில், இந்திய வெளியுறவு அமைச்சர் இங்கு வருவதற்கு முன்னர் சுளையாக எதனையும் சாதித்து தமது பலத்தை நிறுவிவிட வேண்டுமென்ற அவசர துடிப்பில் இத்தகைய ஆத்திர அகோர தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது!

ஆத்திரக்காரனுக்கு புத்திமத்திமம் எவரும் இவர்களை திருத்தவே முடியாது.

— மயூரன்

## இரவு பகல் படகுச்சேவை

(புங்குடுதீவு)

தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி அராலித்துறை படகுச்சேவையினர் இரவு, பகல் படகுச்சேவைகளை நடத்திவருகின்றார்கள்.

தீவுப்பகுதியிலிருந்து பெரும் தொகையான மக்கள் நாளாந்தம் தங்களின் அன்றாட தேவைகளுக்காக யாழ்ப்பாணம் சென்றுதிரும்புகின்றனர். (101)

கலை, கலாச்சார

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வீதி, புங்கன்குளம், யாழ்ப்பாணம். 'சாபம்'

### கவிதை

சிரேஷ்டபிரிவு: 1. தியாகராசா சுஜீவன் புலோப்பளை றோட், பளை 'வீட்டுக்கோர் ஆளாவோம்' 2. த. மோகனரூபி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், 'மீண்டும் ஒரு பிறவி எடுத்து' 3. அ. அமுதினி 22. இராமநாதன் வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம். 'தமிழீழ வானில் எதிரியின் வித்தை'

மத்தியபிரிவு: 1. சி. சுதர்சினி மெதடிஸ்ப் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை. 'இனியொரு சூளுரைப்போம்' 2. எஸ். பிரபாகரன் கரவெட்டி மத்தி, கரவெட்டி. 'விண்ணுலகிலிருந்துவந்த கடிதம்' 3. ரமணி ராஜரட்ணம், நொச்சிமோட்டை, ஓமந்தை. 'எங்குற்றீ...?

மேற்பிரிவு: 1. தயாளினி தர்மலிங்கம், குடத்தனை மேற்கு: குடத்தனை. 'மண்ணுகப் போகிறேன்' 2. சின்னத்தம்பி ஸ்ரீவதனு, ஆனைக்கோட்டை "என் கல்லறை மீதும் பூக்கள் மலரும்" 3. வேதாரணியம் தனேஸ்குமார் [தேனு] அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. 'புதியதோர் பூமியில் புலிக்கொடி பறக்குது'

தனியார்: 1. சி. குமரவேல், 466, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 'யூ; கே: இல் நானும் ...களத்தில அவனும்' 2. முருகனடியான், இல 174, கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 'எங்களின் தளபதி தம்பி பிரபா' 3. கே குயின் சயிலா 85, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 'பேச்சும் மூச்சும்...'

# ★ குவைத்திற்குள் முன்னேற முயன்ற பிரிட்டனின் தரைப் படைகள் பாலைவனத்தில் தவிப்பு

(ரியாட்)

குவைத்திற்கு தரைமூலம் முன்னேறமுயன்ற பிரிட்டன் தரைப்படைகள் எதுவும் பாலைவனத்தினூடாக முன்னேறமுடியாநிலையில் திணறித் தவித்துவருகின்றன. இதையடுத்து தரைப்படைத் தாக்குதல் உடனடியாக கைவிடப்பட்டு, கடும் விமானத் தாக்குதலைமட்டும் மேற்கொள்ளவதென அமெரிக்கா, பிரிட்டன் முடிவுசெய்துள்ளன.

★ சவூதி அரேபியாமீது 15 'ஸ்கட்' ஏவுகணைகளை ஈராக் மேற்கொண்டதில் 9 'பேட்ரியாட்' ஏவுகணைமூலம் சுட்டு வீழ்த்தப்பட்டும், 3 நீரினுள் வீழ்ந்து செயலிழந்துமுள்ளது.

## 172 விமானங்கள் வீழ்த்தப்பட்டன

★ இதுவரை 172 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது. 18 விமானங்கள் மாத்திரமே வீழ்த்தப்பட்டதாக அமெரிக்கா அறிவிப்பு.

★ வீழ்ந்த விமானங்களில் 9 அமெரிக்கா, 3 பிரிட்டன், 2 சவூதி, 3 குவைத் என அமெரிக்கா தெரிவித்தது.

★ 12 அமெரிக்க விமானிகளை காணவில்லை; 7 விமானிகள் விமானங்களுடன் சுட்டு வீழ்த்தப்பட்டனர். ஈராக் படைகள் 2 அமெரிக்க, 2 பிரிட்டன் தலா ஒவ்வொன்று இத்தாலி, குவைத் உட்பட 20 விமானிகளை உயிருடன் பிடித்துள்ளனர். இவர்கள் தொலைக்காட்சிகள்மூலம் காண்பிக்கப்பட்டனர்.

★ ஈராக்கிய ஏவுகணைகளை அழிக்கும் துரித பயிற்சியில் இஸ்ரேலியருக்கு அமெரிக்கா 'பேட்ரியட்' ஏவுகணைகளை பற்றி பயிற்சியளித்துவருகிறது.

★ ஈராக்கின் 'ஸ்கட்', 'பலஸ்ரிக்' ஏவுகணைகள் அமெரிக்க விமானக்குண்டுவீச்சை படுத்து நடமாடும் தளம்மூலம் ஏவப்பட்டுவருகிறது.

★ ஈராக்கின் ஏவுகணை தாக்குதலுக்கு உடனடியாக இல்லாவிடினும் தகுந்த நேரத்தில் பதிலடி கொடுக்கும் அமெரிக்க-இஸ்ரேல் உறவு சீராக உள்ளதாக வளைகுடா யுத்தம் ஆரம்பித்தபின் வழங்கிய முதல் பேட்டியில் இஸ்ரேல் பிரதமர் ஷமீர் தெரிவித்துள்ளார்.

★ கடந்த 72 மணிநேரத்தில் இஸ்ரேல் பிரதமர் ஷமீரும் அமெரிக்க அதிபரும் 5 முறை பல மணிநேரம் தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ளனர்.

★ அமெரிக்க அதிபரின் விசேட பிரதிநிதி அவசரமாக இஸ்ரேல் சென்றுள்ளார்.

★ வளைகுடா யுத்தம் குறித்து அமெரிக்க நேசநாடுகளிடையேயும், நேட்டோ நாடுகளிலும் கருத்துக் கணிப்பெடுப்புஎடுக்கப்பட்டுள்ளது.

★ ஈராக்கில் பிடிக்கப்பட்ட அமெரிக்க, நேசப்படைகள் சர்வதேச விதிமுறைகளுக்கமைய நடாத்தப்படுவார்களென ஹுசைன் அறிவித்தார்.

★ இஸ்ரேலுக்கு எதிரான ஈராக்கின் தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஆதரவளிக்குமென அறிவித்துள்ளது.

★ 5 நாள் யுத்தத்தில் ஈராக் இதுவரை 40—52 வரையிலான 'ஸ்கட்', 'பலஸ்ரிக்' ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

★ பாலைவன பகுதியில் நிலைகொண்டுள்ள பன்னாட்டு படைவீரர்களும் தோல்வியாதிகளால் பெருமளவு பாதிப்படைந்துள்ளனர்.

★ குவைத் அமெரிக்காவின் மற்றுமொரு வியட்நாமாக மாறுமென அமெரிக்க அதிபர் புஷ் நாட்டுமக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

★ குவைத்தில் உள்ள ஈராக்கிய நிலைகள் மீது பெரும் தாக்குதலை நடாத்த பிரான்ஸ் விமானப்படை தயாராகி வருவதாக அதிபர் மித்ரோன் தெரிவித்துள்ளார்.

★ கடந்த 48 மணிநேரத்தில் 19 ஈராக்கிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்கா அறிவிப்பு.

★ ஈராக் பிடித்த பல அமெரிக்க விமானிகளை பாக்தாத் வீதியூடாக கண்கள் கட்டப்பட்டு யுத்த தர்மத்துக்கு மாறாக கொண்டு செல்லப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ ஈராக்கின் குறிப்பிட்ட சில படைகளே இதுவரை யுத்தத்தில் ஈடுபட்டதாகவும், கடற்படை இதுவரை பயன்படுத்தப்படவில்லையென்றும் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

## யுத்தம் குறித்து மீள்பரிசீலனை

★ இதுவரை நடந்த யுத்தம் குறித்து அமெரிக்க, நேசப்படைகள் மீள்பரிசீலனை செய்யவுள்ளன.

★ அமெரிக்க அதிபருக்கு ஆதரவாகவும் ஈராக்குக்கு எதிராகவும் நியூயோர்க்கில் ஐ. நா. தலைமையகம் முன் ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்.

★ ஈராக்கில் அப்பாவி பொதுமக்களை அமெரிக்க, நேசப்படைகள் அகோர குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்வதாக ஜோர்தான் குற்றச்சாட்டு, நிலைமைகளை ஆராய பாராளுமன்றில் அவசரக் கூட்டம்.

★ வளைகுடாவிலுள்ள 3 ஸ்பானிய யுத்தக் கப்பல்களையும் உடனடியாக வாபஸ் பெறுமாறு ஆயிரக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்.

★ ஈராக் படைகள் வெற்றிபெறுமென அதிபர் ஹுசைன் தொலைக்காட்சி உரையில் நம்பிக்கை.

★ வளைகுடா போரை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஈரான் ஜனாதிபதி ஐ. நா செயலாளரை கோரியுள்ளார். இதற்கான உதவிகளை ஈரான் வழங்குமென்றார்.

★ ஈராக்கை ஆதரித்தும், அமெரிக்காவை எதிர்த்தும் சோவியத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகிறது. கம்யூனிச எம். பிக்கள் கொர்பச்சேவிற்கு ஈராக்கை ஆதரித்து நெருக்கடி கொடுத்துவருகிறார்கள்.

★ துருக்கியிலிருந்து அமெரிக்க விமானங்கள் தாக்குவதையடுத்து ஈராக் கடும் சீற்றமடைந்துள்ளது.

## 160 பொதுமக்கள் பலி

★ ஈராக் மீதான தாக்குதலில் 160 பேர்வரை பொதுமக்கள் பலியென ஈராக் அறிவிப்பு. 40 படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்கா கூறியது.

★ ஈராக் இதுவரை மேற்கொண்ட ஏவுகணை தாக்குதலில் இரசாயன, நச்சு ஆயுதங்கள் பாவிக்கப்படவில்லையென அமெரிக்கா தெரிவித்தது.

★ கடந்த 5 நாள் யுத்தத்தில் ஈராக்கிலிருந்து குவைத்துக்கான சகல விநியோகங்களும் தடைபடுத்தப்பட்டும், ஈராக்கிய விமானங்கள் பறப்பது பெருமளவு தடைசெய்யப்பட்டும் ஈராக்கிய ஏவுகணைகள் பல வானில் வைத்தே அழிக்கப்பட்டுமுள்ளதாக இந்த தாக்குதலுக்குப் பொறுப்பான அமெரிக்க இராணுவ தளபதி தெரிவித்தார்.

Y.M.C.A வாசிகசாலை

★ வான் பாதுகாப்புடன்

# குவைத் எல்லையை நோக்கி பன்னாட்டு படைகள் நகர்வு

(வாஷிங்டன்)

குவைத்தின் வட எல்லையை நோக்கி பன்னாட்டுப் படைகள் ஹெலிக்கப்டர்களின் வான் பாதுகாப்புடன் நகரத் தொடங்கிவிட்டன? ஒருவார காலத்தில் ஈராக்கிய படைகளுடன் நேரடி தரைப்படை யுத்தத்தில் ஈடுபடலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சவுதிஅரேபியாவின் முக்கிய நகரமான 'றியாத்தின்' மீது ஈராக் கடந்த இரண்டு நாட்களில் இரண்டாவது தடவையாக ஏவுகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளது.

இதேவேளையில் ஈராக்கியபடையினர் பன்னுநாட்டு படையின் மேலும் 13 விமானங்களை சுட்டுவீழ்த்தியுள்ளதாகவும்- பல விமானிகள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், ஆருவது நாள் யுத்தத்தில் பன்னாட்டுப் படைகளின் விமான எதிர்த் தாக்குதலின்போது 80 ஈராக்கிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகவும், விமானத் தாக்குதல்களில் பலத்த வெற்றி எட்டியுள்ளதாகவும் நேச நாடுகள் திருப்தி தெரிவித்துள்ளன.

## அரபு நாடுகள் கண்டனம்

அமெரிக்க நேசநாட்டு விமானப்படையினர், துருக்கி விமான நிலையத்தை பயன்படுத்தி 'ஈராக் மீது தாக்குதல் நடாத்துவதற்கு அரபு உலகம் முழுவதிலும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

'ஈராக்' நாட்டின் இறைமையை மதியாமல் துருக்கி நடந்து கொள்வதை நேரடியாக கண்டிக்க ஈராக் நாட்டு விஷேட தூதுவர் துருக்கி பயணமாகியுள்ளார்.

இதேவேளையில், சிரியா, ஜோர்த்தான், லிபியா மொறொக்கோ நாடுகளும். துருக்கிக்கு எதிராக கண்டனக் குரல்கள் எழுப்பியுள்ளன

# சாவகச்சேரியிலும் கட்டுப்பாட்டு விலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர்கள் சங்கமும் தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விற்பனைசெய்யப்படும அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்துள்ளது.

இந்த விலை நிர்ணயம் தொடர்பான அறிவித்தலை மேற்படி சங்கம் சாவகச்சேரி நகர் மற்றும் அயல் கிராமங்களிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளின் அடிப்படையிலேயே சாவகசிசேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கமும் பொருள்களின் விலைகளை நிர்ணயித்துள்ளது.

## ஹெலி தாக்குதல்

நேற்றுமாலை பலாலி, வசாவிளான், நீர்வேலி, அச்சுவேலி, புத்தூர் போன்ற இடங்களில் ஹெலிக்கொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி அறியமுடியவில்லை. [வி, 152, 75]

## பரீட்சை எழுதுவதற்கு மாணவருக்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள சில பாடசாலைகளில் வசதிக்கட்டணம் செலுத்தாத காரணத்தினுல் பரீட்சை எழுத மாணவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இதே கல்லூரிகளில் வகுப்புகள் நடைபெருமல் இருந்த போதிலும் சகல மாணவர்களிடமும் பாடசாலை நிர்வாகம், வசதிக் கட்டணப் பணத்தை அறவிட்டதாகவும் தற்போதைய சூழ் நிலையில் வசதிக்கட்டணம் செலுத்தாமலிருக்கும் மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று பெற்ருேர்கள் தெரிவிக்கின்றனர்.

### பொதிசுமக்கும் வாகன உரிமையாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பொதிசுமக்கும் வாகன உரிமையாளர்கள் சங்கத்தின் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 3மணிக்கு சங்கத்தலைவரின் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்க இருப்பதால் அனைத்து வாகன உரிமையாவர்களும் தவருது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

### விபத்தில் ஒருவர் காயம்

(பளை)

இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள்- மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி பலத்த காயமடைந்தார்.

பளையைச் சேர்ந்த இ: செல்லத்துரை [வயது54] என்பவரே இச் சம்பவத்தில் காயமடைந்தவராவார்,

### மர்மமான முறையில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரமாக வீடு திரும்பாததால் உறவினர் தெஹிவளை பொலிஸில் புகார் செய்யச் சென்றபோது, இளைஞர் ஒருவரின் சடலம் கொழும்பு பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்ததைத்தொடர்ந்து இந்த இளைஞரின் சடலம் அடையாளம் காணப்பட்டது..

மர்மமான முறையில் இறந்து கிடந்த இவ்இளைஞன் ''ஈழநாடு'' பத்திரிகைக் காரியாலயத்தில் கடமையாற்றும் திரு. கே. தங்கவேலுவின் 2-வது புதல்வன் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## கிளிநொச்சியில் வீடு சேதம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கனகபுரத்தில் நேற்று நான்கு குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலினுல் ஒரு வீடு முற்ருகச் சேதமடைந்தது.

இதேவேளை காலை 11-00 மணியளவில் நெடுங்கேணிப் பகுதியில் ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினுல் கடையொன்று முற்ருகச் சேதமடைந்தது.

### கிறீஸ்-மண்ணெண்ணை கலப்பில் டீசல்

(சாவகச்சேரி)

மண்ணெண்ணை விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து சில எரிபொருள் வியாபாரிகள், மண்ணெண்ணையுடன் கிறீஸைச் சேர்த்துக் கலப்படம்செய்து டீசலாக உருவாக்கி விற்பனைசெய்வதாக தெரியவருகிறது.

இப்புதிய கண்டுபிடிப்பில் உருவான டீசல் தற்பொழுது விற்பனைசெய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### எரிபொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இருளிலேயே மூழ்கி இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை, யாழ். நகர் மத்தியிலும், வெளியிடங்களில் உள்ள சில கடைகளிலும் சீனி, சவர்க்காரம், தேங்காயெண்ணையும், யாழ். விக்ரோறியா வீதியிலுள்ள எரிபொருள் விற்பனைக் கடையில் மண்ணெண்ணையும் விற்பனைசெய்யப்பட்டன. (வி)

### மட்டு. - அம்பாறை மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### உரவகை அனுப்பப்படும்

(மாங்குளம்)

விவசாயிகளுக்கு தேவையான உரம், இரசாயனம் மற்றும் இதர பொருட்களை வடபகுதிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. (150)

### பிரஜைகள் குழு உறுப்பினர் கடத்தல்

திருகோணமலை)

திருகோணமலை பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவர், முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கடத்தப்பட்டுள்ளார்.

நிலாவெளியில் தனியாகப் பயணம் செய்துகொண்டிருந்த போதே இவர் கடத்தப்பட்டதாகதெரிவிக்கப்படுகிறது.(வி)

### பதுக்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதுக்கியது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்(வி

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

### திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் கண்ணிவெடியில் சிக்கியதால் ட்ரக் வண்டி முற்ருகச் சேதமடைந்ததாகவும், அதில் வந்த பல இராணுவத்தினர் அதே இடத்தில் பலியானதாகவும், பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

### தமிழ்ப் பகுதிகளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

#### தென்மராட்சியில்

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இரு தடவை விமானங்கள் பயங்கரத் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலில் பெண்மணி ஒருவரின் வலதுகை துண்டிக்கப்பட்டதுடன் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் கந்தசாமி அருளம்மா நல்லதம்பி, ச. நாகராசா, வீ. தவரத்தினம், ம. அற்புதராஜா ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன.

தவசியம்மா (53 வயது) என்னும் பெண்மணியே இச் சம்பவத்தில் தனது வலது கையை இழந்தவராவார்.

வேம்பராய் மயானத்தை அண்டிய பகுதிகளில் காலை தொடர்ச்சியாக இரு மணித்தியாலங்கள் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது (107)

#### மானிப்பாயில்

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில் நேற்று நண்பகல் 12-00 மணியளவில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இப்பாடசாலை வளவில் விழுந்த பாரியகுண்டு தெய்வாதீனமாக வெடிக்காமையினுல் நூற்றுக்கணக்கான மாணவிகள் உயிர்தப்பினர்கள்.

இச்சம்பவத்தில் பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்று சேதமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. [71]

### காரைநகரில் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படையினர் நேற்றுப் பகல் 11 மணியளவில் கருங்காலிப் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர். (வி)

### மிதிவெடியில் இராணுவம் சிக்கியது

[மட்டுநகர்]

மட்டக்களப்பிலுள்ள இலாவாங்குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினர் முள்ளிக்குளம் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதாகவும், இதே பகுதியிலுள்ள பாலையடிவெட்டையிலும் இராணுவத்தினர் பல மிதிவெடிகளில் சிச்கியதில் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### குவைத்

(1ம் பக்க தொடர்ச்சி]

திருப்பதாக பன்னாட்டுப் படைகளின் இராணுவ அதிகாரி அறிவித்துள்ளார்.

இந்தச்சம்பவம் தம்மால் படம்பிடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினர். [பு]